**பதியதலாவ பிரதேச சபை - 2023**

**------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதியதலாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பதியதலாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன் சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கும் தரப்பினர்களால் வகிககப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 308,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | வஹவ வெந்நீர் ஊற்றினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 449,744 நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோராக மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டம் தொடர்பாக செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 49,972 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்று:துவரும் ஆண்டில் இறுதிக் கணக்கறிக்கையினைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்த கழிவுப் பொருள் நிலையத்தின் கூரையை நிர்மாணித்தல் மற்றும் வஹவ நெந்நீர் ஊற்றினை அபிவிருத்தி செய்தல் ஆகிய இரண்டு செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 997,716 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். உரிய செயற்திட்டத்தின் பெறுமதியானது அடுத்துவரும் ஆண்டில் கணக்ககறிக்கையினைத் தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தி உதவி | ஏற்றுக்கொள்கிறேன். அடுத்துவரும் ஆண்டில் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட கணக்கில் மற்றும் காசேட்டில் மீதி பூச்சியமாக இருந்தும் பணம் மாற்றல் கண்க்கில் ரூபா 2,587,419 செலவு மீதி மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்ககறிக்கையினைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | மீளாய்வாண்டு தொடர்பான வழங்கல் உபகரண செலவு (603) ரூபா 1,051,650 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 கணக்கு விடயங்களின் பட்டோலைகளின் படியான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் படியான மீதிக்குமிடையே ரூபா 19,453,528 இணக்கமின்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து வரும் ஆண்டில் கணக்கறிக்கையினைத் தயாரிக்கும் போது சரியாக கணக்குவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏடுகளை சரியாக நாளதுவரையாக்கி இணக்கமின்மைக் கான காரணத்தை ஆராய்ந்து பார்த்த சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் போது தோற்றுவிக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சலின் சரியான மொத்தப் பெறுமதிக்கு ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள காசும் காசுக்குச் சமமானவைகளையும் சேர்த்ததன் பின்னரான பெறுமதிக்கும் ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவைகளுக்குமிடையே ரூபா 9,944,447 இணக்கமின்மை காணப்பட்டது. | அடுத்துவரும் அண்டிற்கான காசுப்பாய்ச்சல்லினைத் தயாரிக்கும் போது இவ்வாறான தட்டெழுத்தாளர்களால் ஏற்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூல சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 657,916,979 | (i) காணி உறுதி<br>(ii) காணி கட்டிடங்களின் பெறுமதியை உள்ளடக்கிய பட்டோலை<br>(iii) ஆதனங்களின் மீளாய்வு அறிக்கை<br>(iv) நாளதுவரை யாக் கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு | ஏற்றுக்கொள்கிறேன். 10 உறுதிகளுக்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருடன் உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும் என்பதனால் உறுதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் மீளாய்வு | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இயந்திரங்களும் உபகரணங்களும் | 7,439,570 | (i) பெறுமதிகளை உள்ளடக்கிய பட்டோலை<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு | பட்டோலைகளையும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினையும் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 10,878,888 | | | |
| (ஈ) | வெளிக்கள களஞ்சியம் | 3,360 | (i) பட்டோலைகள்<br>(ii) பதிவேடுகள்<br>(iii) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | இக்கணக்குகளுக்காக பட்டோலைகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் எதுவும் இல்லாததுடன் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டுவரும் மீதியாகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள்சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | வருமான கடன்படடோர் (குத்தகை) | 24,115 | | | |
| (ஊ) | கையிலுள்ள காசு | 475 | | | |
| (எ) | இலங்கை வங்கி | 1,000 | | | |
| (ஏ) | மிகை அறவீடு | 1,500 | | | |
| (ஐ) | முத்திரை வரி | 127,275 | | | |
| (ஒ) | VAT | 9,600 | | | |
| (ஓ) | இ.மி.ச. கடன்கொடுத்தோர் | 93,479 | | | |
| (ஔ) | வருமானங்களுக்கான வைப்புக்கள் | 131,329 | | | |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள்** | **இணக்கமின்மைகள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|

**முதலிவற்றுக்கான தொடர்புகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (EPF) அதிகாரச் சட்டம் மற்றும் 1980 இன் ஊழிய ர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (ETF) அதிகாரச் சட்டம் | மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் தொடக்க சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்லவாண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான 05 மாதங்களுக்காக ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 53,162 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 7,974 குறைத்து கணிப்பீடு செய்து நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த து. | அடிக்கடி சம்பள தயாரிப்பு உத்தியோகத்தர் மாற்றமடைதலின் அடிப்படையில் EPF மற்றும் ETF பணத்தை கணிப்பீடு செய்தல் மாற்றமடைந்துள்ளது டன் தற்பொழுது சம்பளம் தயாரிக்கின்ற உத்தியோகத்தருக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணத்தை கணிப்பீடு செய்வதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதிகாரசட்டத்தி லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| | (i) 5(12) ஆம் விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர்களிடமிரு ந்து போதியளவு பிணைப்பத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர்களி டமிருந்து போதியளவு பிணைப் பணத்தை பெற்றுக்கொள்வதற் கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மற்றும் நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 59 ஆம் விதி | சபையின் வருமான பரீட்சகரினால் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வணிக, வியாபார மற்றும் | ஏற்றுக்கொள்கிறேன். சபையின் வருமான பரீட்சகர் உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்பாளராக | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கைத்தொழில் தொடர்பான பட்டியலினைத் தயாரித்து மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வருவதற்காக விடுமுறை பெற்றுள்ளதனால் அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வினை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் PT/04/2017 ஆம் இலக்க 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதிய மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் 7.5 ஆம் பிரிவு | ரூபா 100,000 எல்லையினை மிகைத்த தீருத்த வேலைகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பெக்கோ இயந்திரத்தின் ரூபா 925,170 மற்றும் ரூபா 590,000 தொகைகளான 02 திருத்த வேலைகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் ரூபா 100,000 எல்லையினை மிகைத்து மேற்கொள்கின்ற திருத்த வேலைகளின் போது உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 திவெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | வாகன எரிபொருள் நுகர்வின் பரீட்சிப்பானது 12 மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். வாகன எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தலினை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 4,913,718 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,046,831 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் (ரூபா) | பட்டியலிடப்பட்ட வருமானம் (ரூபா) | சேகரிக்கப்பட்ட வருமானம் (ரூபா) | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (ரூபா) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் (ரூபா) | பட்டியலிடப்பட்ட வருமானம் (ரூபா) | சேகரிக்கப்பட்ட வருமானம (ரூபா) | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (ரூபா) |
| i. | வீத வரியும் வரியும் | 206,000 | 202,250 | 202,250 | - | 206,000 | 228,910 | 228,910 | - |
| ii. | வாடகை | 7,182,000 | 6,182,302 | 6,153,712 | 1,924,114 | 6,177,000 | 5,083,410 | 5,977,837 | 1,895,524 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 322,000 | 484,325 | 484,325 | - | 276,000 | 265,175 | 265,175 | - |
| iv. | ஏனைய வருமானம் | 2,464,000 | 2,047,186 | 2,047,186 | 24,115 | 2,634,000 | 2,783,788 | 2,783,788 | 24,115 |
| | மொத்தம் | 10,174,000 | 8,916,063 | 8,887,473 | 1,948,229 | 9,293,000 | 8,361,283 | 9,255,710 | 1,919,639 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான கடை வாடகை வருமானம் ரூபா 1,924,114 ஆகும். | ஏற்றுக்கொள்கிறேன். நிலுவையான கடை வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளங்கண்டு உப நியதிச்சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் | புதிய 03 உப நியதிச்சட்டங்களைத் தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை 05 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | ஏனைய உப நியதிச்சட்டங்களை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டமாக்குதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் 2023 ஆம் ஆண்டின் போது மாதாந்தம் 10 தொன் உக்குகின்ற கழிவுப் பொருட்கள் மற்றும் 20 தொன் உக்காத கழிவுப் பொருட்களுமாக வருடாந்தம் மொத்தமாக 360 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் ரூபா 2,011,840 செலவு செய்து சேகரிக்கப்பட்டிருந்தது. உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி 1,215 கிலோகிராம் சேதனப் பசளைகள் உற்பத்தி செய்யப்பட்டு அந்த இருப்பில் 449 கிலோகிராம் விற்பனை செய்து 2023 ஆம் ஆண்டில் ரூபா 11,225 வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்தின் மூலம் விவசாயிகளுக்கு சேதனப் பசளைகள் இலவசமாக அதிக அளவில் வழங்கியதனால் எங்கள் நிறுவனத்திடமிருந்து தேசனப் பசளைகளைப் பெற்றுக்கொள்ளும் அளவு குறைவடைந்துள்ளதனால் விற்பனை குறைவடைவதற்கு அது அதிக அளவில் தாக்கமளித்துள்ளது. | சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தினைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வின் மூலம் பற்றாக்குறை என அடையாளங்காணப்பட்ட 33 பொருள் விடயங்கள் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு உரிய பொருட்களை சபைக்கு கொண்டு வருவதற்கு அல்லது அது தொடர்பான பெறுமதியை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பொருள் மீளாய்வின் மூலம் பற்றாக்குறை என அடையாளங்காணப்பட்ட பொருள் விடயங்களின் பெறுமதியை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பிக்களை அடையாளங்கண்டு பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 யூலை 05 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 27 இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட உபகுத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் குழுவின் மூலம் பிரதேச சபையின் 19 கடைகள் உபகுத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என இனங்காணப்பட்டிருந்ததுடன் அவ்வாறு உப குத்தகைக்கு வழங்கிய வாடகைப் பணம் பிரதேச சபைக்கு செலுத்திய வாடகைப் பணத்தை மிகைத்து ரூபா 2,400 இலிருந்து ரூபா 25,900 வரையான வீச்சில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் பிரதேச சபையினால் இக்கடைகளை சபைக்கு பொறுப்பேற்று மீண்டும் கேள்வி கோருவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2023 யூலை 31 ஆந் திகதிய | ஏற்றுக்கொள்கிறேன். பிரதேச சபையினால் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகையினை மாத்திரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அக்கடைகள் உறுதியாக உபகுத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் வரை மீண்டும் கேள்வி கோருதலினை | உப குத்தகைதாரர்களை சட்டமாக்குவதற்கு அல்லது கடைகளை பொறுப்பேற்று கேள்வி கோரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடிதத்தின் மூலம் இக்கடைகள் நிச்சயமாக உப குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் வரை மீண்டும் கேள்வி கோருதலினை கைவிடுமாறு அறிவித்தின் காரணமாக அந்நடவடிக்கையினை நிறுத்தி 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக முறைப்படியான புலனாய்வு அறிக்கையினைப் பெற்று தேவையான நடவடிக்கையினை துரிதமாக அமுல்ப்படுத்த வேண்டியிருந்தது. | கைவிடுமாறு தெரிவித்து எங்களுக்கு கடிதம் அனுப்பபபட்டுள்ளது. இது தொடர்பான புலனாய்வு அறிக்கை இதுவரை கிடைத்திருக்கவில்லை. | |
| (ஈ) | பிரதேச சபையினால் பிரதேச அபிவிருத்தி செயற்திட்டத்தின் (LDSP-PT 2) கீழ் ஊறுகாய் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக 2023 யூலை 08 ஆந் திகதியிலிருந்து 2023 நவம்பர் 13 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 6,788,205 பெறுமதியான இயந்திர மற்றும் உபகரண இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கு முன்னர் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாட்டினை வழங்கியதன் காரணமாக கொள்வனவு செய்த இந்த உபகரணங்கள் களஞ்சியத்திலும் வாகனங்கள் நிறுத்துமிடத்திலும் பயன்பாட்டிறகு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியப்படுத்தி காணப்பட்டதுடன் இதன் காரணமாக உத்தரவாத சான்றிதழுடன் காணப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந்தும் அதன் உத்தவாத காலத்தில் 08 மாதங்கள் தற்பொழுது கடந்திருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன். LDSP-PT 2 இன் கீழ் தேசிக்காய் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் செயற்திட்டம் தொடர்பாக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் முதலாவது கட்டத்தின் போது நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டிருந்துதடன் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கான நிதி ஏற்பாட்டினை இரண்டாம் கட்டத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டு இயந்திரங்களையும் உபகரணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும். |
| **(உ)** | **கெப் வாகனங்களின் விபத்து தொடர்பாக பரீட்சித்தல்** | | |
| | (i) கிழக்கு மாகாண ஆளுநரின் 2184/9 ஆம் இலக்க 2020 யூலை 13 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரதேச சபைக்காக விதிக்கப்பட்ட விதி இலக்கம் 1.4(1) இன் பிரகாரம் மாவட்டத்திற்கு வெளியே வாகனங்களை எடுத்துச்செல்லும் போது உரிய அனுமதியானது நிர்ணயிக்கப்பட்ட படிவத்தின் மூலம் உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக பிரதேச சபையின் மாவட்டத்திற்கு வெளியே மஹியங்கன வைத்தியசாலைக்கு ஓட்டிச் செல்லும் போது 2023 பெப்ரவரி 13 ஆந் திகதி பதியதலாவ மஹியங்கன வீதியின் 51 ஆம் சந்திக்கு அருகாமையில் கெப் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். அவசர சுகவீனத்திற்கு சிகிச்சை செய்வதற்காக செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது. சபையின் தலைவர் சிகிச்சை பெறுவதற்காக மஹியங்கனை வைத்தியசாலைக்குச் செல்கின்றார் என தொலைபேசியின் வாயிலாக அம்பாறை உள்ளுராட்சி உதவி ஆணையாருக்கு தெரிவிக்கப்பட்டது என தலைவர் தெரிவித்தார். | உள்ளுராட்சி ஆணையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரீட்சித்ததன் பின்னர் நட்டம் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் விபத்து இடம்பெற்று 10 மாத காலத்தை மிகைத்திருந்தும் உரிய நட்டத்தின் பெறுமதியை நிர்ணயித்து அவ்வாறான ஒரு அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்படவில்லை. | எங்களால் தொடக்க புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப அறிக்கை அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையிடம் காணப்படுகின்ற 07 வாகனங்களை திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக மதிப்பீடு செய்து அந்த நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்துவதிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பொறுப்பில் காணப்படுகின்ற 10 வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். உரிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் நடவடிக்கைக்காக வேண்டிக் கொள்ளப்பட்டு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தற்பொழுது சபையின் பெயரில் பதிவுசெய்யப்படாத வாகனங்களை சபையின் பெயருக்கு பதிவுசெய்தல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையின் 36 மயானங்களின் பெறுமதி அடையாளங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். மயானங்களின் பெறுமதியை எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையில் 09 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | வெற்றிடம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டது. | ஆளணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் இரண்டு மரணமடைந்த உத்தியோகத்தர்களின் மற்றும் | ஏற்றுக்கொள்கிறேன். இடமாற்றம் பெற்றுச்சென்ற | நிலுவைக் கடன் மீதியினை அறவீடு |

| | | |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரின் ரூபா 226,570 பெறுமதியான 03 கடன் மீதிகள் 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடாது காணப்பட்டது. | ஒரு நிறுவனம் தொடர்பாக தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது, பிணையாளரின் தகவலை தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது எனவும் மிகுதிப் பணத்தை மரண பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக போதிய சிபாரிசுகள் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். நிறுவனரீதியான செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை போதியளவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிறுவன ரீதியான செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கான சிபாரிசுகளை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபித்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்து கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் மூலம் கிரவான பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக 1988 இன் 56 | ஏற்றுக்கொள்கிறேன். அடுத்துவரும் ஆண்டின் போது சுற்றாடல் | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் பேணப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இது தொடர்பாக போதிய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் குறிக்கோள்களை யும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |